அன்பான தமிழ் உறவுகளுக்கு வணக்கம்

**தமிழ் தேசியத்தை சிதைக்கும் படைப்புக்களை புறக்கணிப்போம்..**

தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் பல்வேறு பரிமாணங்களையும் தன்னகத்தே கொண்டு தமிழீழ விடுதலைப் புலிகளின் அதிகாரபூர்வ ஒளி,ஒலி ஊடக நிறுவனமாக நிதர்சனம் நிறுவனம் இயங்கி வந்ததை யாவரும் அறிவீர்கள். வீரம் செறிந்த தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் வரலாற்றையும், தமிழ் மக்களின் கலை, கலாசார, பண்பாட்டு விழுமியங்களையும் வரலாற்றுப் பிறழ்வின்றி எமது வரும்கால சந்ததியினருக்கு கடத்தும் பொருட்டும், எமது விடுதலைப் போராட்டத்தின் தமிழ் தேசியக் கோட்பாடு சார்ந்த நியாயத்தை சர்வதேசத்தின் முன் நிறுத்தவும் நிதர்சனம் நிறுவனமானது தனது ஊடக செயற்பாடுகளை, பல மாவீரர்களின் உயிர்கொடுப்புகளுக்கு மத்தியில் தன் பணிகளை செவ்வனே செய்துவந்துள்ளது.

கடந்த 2009 மே 18 தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் ஆயுத மௌனிப்பிற்கு முன்னர் தாயகத்திலும் சரி, புலம்பெயர் தேசங்களிலும் சரி உருவாக்கப்படும் கலைப் படைப்புக்கள் தொடர்பாக மிகவும் கரிசனையோடும், அதே நேரத்தில் இறுக்கமான கட்டுக்கோப்புக்களுடனும் தன் முழுக்கவனத்தையும் செலுத்தி வந்துள்ளது. எமது விடுதலைப் போராட்டத்தின் நியாயப்பாடுகளுக்கு களங்கம் விளைவிக்கும் எந்தக் கலைப் படைப்புக்களையும் தணிக்கை செய்வதுடன் அவற்றிற்கு எதிரான கடும் நடவடிக்கைகளையும் மேற்கொண்டிருந்தது. ஆனாலும் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு எதிரான சில சக்திகள் புல்லுருவித்தனமாக தமது பொய்ப் பிரச்சாரங்களையும், நூல்களையும், விவரணங்களையும் தயாரித்து எமது விடுதலைப் போராட்டத்திற்கு களங்கம் விளைவித்து வந்துள்ளதையும் அவை இன்றும் தொடர்ந்து வருகின்றது என்பதையும் நீங்கள் அறிவீர்கள். கடந்த 2009 மே 18 தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் ஆயுத மௌனிப்பிற்கு பின்னர் சர்வதேசத்தின் முன் தமிழீழ விடுதலைப் புலிகளை ஓர் பயங்கரவாத அமைப்பாக சித்தரிப்பதற்காக சீறீலங்கா மற்றும் இந்தியப் புலனாய்வாளர்களின் ஊடுருவல்கள் எமது கலை இலக்கியப் படைப்பாளர்களையும் விட்டு வைக்கவில்லை. நடுநிலையாளர்கள் என்ற போர்வையில் பல்வேறு பந்திகளையும், நூல்களையும், ஒளி,ஒலி விவரணங்களையும் வெளியிட்டு வருகின்றார்கள். இதற்கு கடந்த காலங்களில் வெளியாகியிருக்கும் பல்வேறு திரைப்படங்களை, நூல்களை நாம் குறிப்பிட்டுக் கூற முடியும். ஆனாலும் அவற்றை எமது மக்கள் அடையாளம் கண்டு புறக்கணித்துள்ளார்கள்.

நிதர்சனம் நிறுவனம் கடந்த 2009 மே 18 தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் ஆயுத மௌனிப்பிற்கு பின்னர் தன் செயற்பாடுகளை தன் வலுவிற்கேற்ப ஆவணத் திரட்டல்கள் மற்றும் புதிய வரலாற்று ஆவணங்கள் தயாரிப்பு போன்ற செயற்பாடுகளில் ஈடுபட்டு வரும் வேளையில், இவ்வாறு வெளியாகும் தமிழீழ தேசியத்துக்கு எதிரான படைப்புக்கள் தொடர்பாகவும் தன் கவனத்தை செலுத்தி, அவ் வெளியீடுகள் தொடர்பாக தமிழ் மக்களுக்கு தமது கருத்தினையும், கண்டனப் பதிவுகளையும் செய்து வந்துள்ளது. இது நிதர்சனம் நிறுவனத்தின் வரலாற்றுக் கடமையும் ஆகும். காலத்திற்கேற்ப வரலாற்றுத் தவறுகள் இன்றி எமது கலைப்படைப்புக்கள் படைக்கப்படவேண்டும் அவை அடுத்த சந்ததிக்கு கடத்தப்படவேண்டும் என்பதுவே தமிழீழ தேசியத் தலைவரின் எண்ணப்பாடுமாகவும் இருந்தது. அவ் எண்ணப்பாட்டை நாம் இன்றும் கடைப்படிக்கவேண்டிய பொறுப்பும், கடப்பாடும் எம் அனைவர் முன்னிலையில்லும் இருக்கின்றது.

அண்மையில் தாயகத்தில் இருந்து வெளியாகிய வளர்ந்து வரும் திரைப்பட இயக்குநர் திரு. மதிசுதா அவர்களின் **வெந்து தணிந்தது காடு** எனும் திரைப்படம் தற்போது தமிழ்மக்கள் மத்தியில் திரையிடப்பட்டு வரும் வேளையில் பல சர்ச்சைகளும், எதிர்ப்புக்களும் எமது கலைஞர்கள் மத்தியிலும், தமிழ்த் தேசிய பற்றாளர்கள் மத்தியிலும் பெரும் கோபத்தையும் ஏற்படுத்தியுள்ளது. நிதர்சனம் நிறுவனமும் இத் திரைப்படத்தை தற்போது (திரைப்படம் வெளியிடப்பட்ட வேளை பார்வைக்காக நிதர்சனம் கோரிய போது இயக்குநர் திரு.மதிசுதா அவர்களால் மறுக்கப்பட்டது) முழுமையாக பார்வையிட்டு இத் திரைப்படம் தொடர்பான கருத்துக்களும், காட்சியமைப்புக்களையும், உரையாடல்களின் உள்ளகத் தன்மை தொடர்பாகவும் கலந்தாலோசிக்கப்பட்டது. இதனடிப்படையில் திரு. மதிசுதா அவர்களின் இத் திரைப்படமானது எமது தேசியத்தின் கொள்கைகளுக்கு முரணாகவும், தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் தமிழ்

மக்களையும், தமிழீழ விடுதலைப் புலிகளையும் தன்னுடைய பொய்மையான கருத்துக்களுக்கூடாக வேறுபடுத்தி தவறான ஒரு வரலாற்றை சர்வதேசத்தின் முன்னால் பதிவு செய்துள்ளார் என்பதையும் நாம் இங்கே பதிவு செய்கின்றோம்.

அத்துடன் முள்ளிவாய்க்கால் இறுதிப் போரில் வாழ்ந்த எம் மக்கள் ஒரு கொள்ளையடிக்கும் மக்கள் கூட்டமாகவும், மக்களின் மரணம் என்பது ஓர் மதிக்கப்படாத செயலாகவும் சித்தரித்துள்ளமை எமது மக்களின் உணர்வை கொச்சைப்படுத்துவதாகும். தமிழீழ விடுதலைப் புலிகளினால் அதி உயரிய பொருளாக மதிக்கப்பட்டு, வீரகாவியமாகும் வரை கழுத்தில் அணிந்திருக்கும் சயனைட் வில்லையை (குப்பி) மிகவும் கீழ்த்தரமான முறையில் தன் காட்சிப்படுத்தலுக்கூடாகவும், உரையாடலுக்கூடாகவும் வெளிப்டுத்தியுள்ளார். முள்ளிவாய்க்காலில் இறுதியாக இடம்பெற்ற இன அழிப்பைச் செய்த சிறீலங்கா அரசு மற்றும் இந்தியாவின் ஈடுபாடு தொடர்பாகவும் தன் கருத்தை நாசுக்காக வெளிப்படுத்தியிருக்கும் இயக்குநர் இவ் அரசாங்கத்தின் இனவழிப்புக்கு சாயம் பூசும் பணியை தன் திரைப்படத்தினூடே கச்சிதமா செய்துள்ளார் என்பதை நாம் இங்கு பதிவு செய்ய விரும்புகிறோம். இவற்றுடன் திரைப்பட விழாக்களுக்கும் விருதினைப் பெறும் நிகழ்ச்சிகளுக்கும் பிறிதொரு பிரதியும், தமிழ் மக்களின் பார்வைக்கு திரையரங்குகளில் திருத்தங்கள் செய்யப்பட்ட (தேசிய ஆதரவாளர்களின் ஆதரவைப் பெற) ஒரு பிரதியையும் பயன்படுத்தி வருவது கண்டிக்கத்தக்கது.

மேற்குறிப்பிட்ட காரணங்கள் தவிர இன்னமும் பல்வேறு தவறான காட்சிப்பதிவுகளை கருத்தில் கொண்டு திரு. மதிசுதாவின் **வெந்து தணிந்தது காடு** திரைப்படம் எமது தேசியப் போராட்டத்திற்கு எதிரானதும், வரலாற்றுக்குப் புறம்பானதுமான திரைப்படம் என்பதையும், எமது தமிழ் பேசும் மக்கள் இவ்வாறான படைப்புக்களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டாம் என்பதையும் நிதர்சனம் நிறுவனத்தினராகிய நாம் இங்கு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

தவறுகள் இருப்பின் திருத்தப்பட வேண்டும். தனது அறியாமையின் பொருட்டு இத்திரைப்படம் உருவாக்கப்பட்டது எனக் கருதினால் இத்திரைப்படத்தின் வெளியீடுகள் அனைத்தையும் நிறுத்தி, இத்திரைப்படம் தொடர்பாக தன் நிலை விளக்கத்தை எமது தமிழ் மக்கள் மத்தியில் வெளிப்படுத்தி, மீண்டும் இவ்வாறான தவறுகள் நடைபெறாது என்பதை உறுதிசெய்து எமது தேசிய போராட்டத்தின் வெற்றிக்கு தொடர்ந்தும் தன் திரைப்படப் பணியை தொடரவேண்டும் என கேட்டுக்கொள்கிறோம்.

தாயகத்தில் பல்வறு படைப்பாளிகள் பல இடையூறுகளுக்கு மத்தியிலும் அற்ப சலுகைகளுக்கு பணியாமல், இன்றும் தமிழீழ தேசியப் போராட்டத்திற்கு ஆதரவாக பல படைப்புக்களை செய்து வருகிறார்கள். எனவே தாயகத்தில் இருந்து வெளியாகும் படைப்புக்களை நாம் வரவேற்கிறோம். கலைஞர்களின் புதிய வரவை நாம் எதிர்பார்க்கிறோம். புதிய படைப்புக்கள் எமது போராட்டத்தின் வரலாற்று ஆவணங்களாக வெளிவரும் என நம்புகிறோம். உண்மையான படைப்பாளிகளுக்கும், படைப்புக்களுக்கும் எமது ஆதரவை வழங்கி வருகிறோம். தமிழீழ தேசியத் தலைவரின் கொள்கையினை ஆழப்பதித்தவர்களாக எமது வரலாற்றுக் கடைமையை உளமார பணியாற்றுவோம்.

நன்றி

‘‘தமிழரின் தாகம் தமிழீழ தாயகம்’’

இவ்வணணம்

சேரமதி சேரலாதன்
07.07.2023
நிதர்சனம் நிறுவனம்